# சீதனமும் இஸ்லாமிய சமூகம் எதிர் கொள்ளும் சவால்களும் தீர்வுகளும்: சம்மாந்துறை பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் சமூகவியல் ஆய்வு

M. Nusrath Banu[1], A.G. Farooza[2]. & A.M. Yumira Banu[3]

[1]Department of Sociolody, [2,3] Department of Social sciences
mnusrathbanu1@gmail.com, agfarooza@gmail.com, yumaira004@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

திருமண நிகழ்வின் போது பெண் வீட்டாரிடமிருந்து மணமகன் வீட்டார்கள் பெற்றுக் கொள்ளும் சீர்வரிசைகள் அனைத்தையுமே சீதனம் எனும் கலாசார அம்சம் விளக்குகிறது. இது தமிழர்களிடமிருந்து பல்லினக் கலப்பு சமூகத்தில் வாழ்கின்றபோது ஏனைய மக்களிடமும் பரவி விடுகின்றது. இவ்வாறே இஸ்லாமியர்களிடமும் இக்கலாசாரம் உட்புகுந்துள்ளது. எனினும் இக் கலாசாரத்தினை இஸ்லாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக இதனைக் கண்டிக்கிறது. சமூகத்தில் சீதனம் எனும் கலாசாரம் பின்பற்றப்படுவதனால் பெண்கள் சமூகமும், பெண்வீட்டாரும் அதிகமான அசௌகரிகங்களை எதிர்கொள்கின்றனர். இந்நிலை சமூக அரங்கில் ஓர் எதிர்மறை அசைவினை ஏற்படுத்தி மக்களை இன்னலுக்குள்ளாக்குகின்றது. இதுவே ஆய்வுப் பிரச்சினையாகும். சீதனத்தினால் பெண்களும், பெண் வீட்டாரும் எதிர்கொள்ளும் சவால்களை கண்டறிவதே ஆய்வின் நோக்கமாகும். ஆய்வுப் பிரதேசத்தில் சீதனம் தொடர்பான பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சீதனத்தினை சமூகவியல் நோக்கில் எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இவ் ஆய்வு இடைவெளியினை பூரணப்படுத்துவதற்காகவே இவ் ஆய்வு இடம்பெற்றது. முதலாம் நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக கட்டமைக்கப்படாத நேர்காணல் 50 நபர்களிடமும், 2 இலக்குக் குழுக் கலந்துரையால்களும், நேரடி அவதானிப்பும் இடம்பெற்றன. இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளக் கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டன. இவ் ஆய்வினூடாகக் கண்டறியப்பட்ட பிரதான முடிவு என்னவெனில் சீதனத்தினால் பெண்களும், பெண் வீட்டாரும் பல்வேறு பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்வதோடு வாழ்வில் ஓர் பிடிப்பற்ற, விரக்தி நிலை தோன்றுகின்றது என்பதாகும். எனவே இவற்றினை தொடரவிடாது சமூகத்தை சீரிய சிந்தனையினாலும், செயற்பாடுகளினாலும் செம்மைப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

**திறவுச் சொற்கள்** : சீதனம், பண்பாட்டு மயமாக்கம், பல்லின சமூகம், மஹர், திருமணம், மணமகன், மணமகள்

## அறிமுகம்

மனிதன் நேர்வழி பெறுவதற்காக அல்லாஹ் காலத்துக்குக் காலம் நபிமார்களையும் ரஸூல்மார்களையும் அனுப்பி வைத்து, அவர்களினூடாக தன் வேதங்களையும், கட்டளைகளையும் இறக்கி வைத்துள்ளான். இவ்வகையில் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு குர்ஆனையும், முஹம்மத் நபி (ஸல்) அவர்களது சொல், செயல் மற்றும் அங்கீகாரங்கள் போன்றவற்றின் தொகுப்பான ஹதீஸ் மூலாதாரத்தினையும் அடிப்படையாகக் கொண்டு வாழும் ஒரு சமூகமே இஸ்லாமிய சமூகம் ஆகும்.

இவ்வகையில் அல்குர்ஆனில் அல்லாஹுத் தஆலா மனிதர்களை உரிய வயதில் திருமணம் செய்து கொள்ளும்படியும், அத்திருமணமானது எவ்வாறானதாக அமைதல் வேண்டும்? என்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளான். அத்திருமண முறை பற்றி ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அத்துடன் தனது செயல்களாலும் செய்து காட்டி தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

இஸ்லாமிய திருமணத்தில் மணப்பெண்ணுக்கு மணமகன் மஹர் கொடுத்துத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அதாவது இது பற்றி திருக்குர்ஆன் கூறுவதாவது, ‘‘அல்லாஹ் கட்டளையிடுகிறான், அவர்களுக்கு குறிப்பிட்ட மஹரை அவர்களிடம் (குறைவின்றி கண்டிப்பாக) நீங்கள் கொடுத்துவிடுங்கள். (நம்பிக்கை கொண்ட அடிமைப் பெண்களையும்) அவர்களுடைய எஜமானின் அனுமதியைப் பெற்று சட்டப்படி அவர்களுக்குரிய மஹரையும், கொடுத்தே நீங்கள் அவர்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்’’

(அல்குர்ஆன் 4:24,25)

இவ்வாறு மஹர் கொடுத்தே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என அல்குர்ஆன் வலியுறுத்ததுகிறது. ஆனால் மணமகனானவர் தான் மஹர் கொடுப்பதற்கு பதிலாக, மணமகளிடம் இருந்தே வரதட்சணையாக ஒரு பெரும் தொகையையோ, பொருளையோ வாங்குகின்றனர். வசதியில்லை என்று எந்த இளைஞனும் அல்லது மணமகனும் மஹர் கொடுப்பதிலிருந்து ஒதுங்கிவிட முடியாது. இருக்கின்ற வசதிக்கேற்ப ஒவ்வொரு மணமகனும் சீதனம் வாங்காமல் உரிய மஹரைக் கொடுத்து திருமணம் முடித்து தன் மனைவியை சந்தோஷமாக வாழ வைக்கலாம்.

சம்மாந்துறை முஸ்லிம் சமூகத்தை பொறுத்தளவில் அவர்களிடத்தில் மார்க்கப்பற்று காணப்படுகிறது என்பது மறுக்க முடியாதது. ஆனால், பெரும்பாண்மையான இளைஞர்கள் சீதனம் வாங்கிக் கொண்டே திருமணம் செய்பவர்களாக காணப்படுகின்றனர். இதனால் பெண்கள் தங்களுக்கு சீதனம் கொடுத்து திருமணம் செய்து கொள்ள போதிய செல்வம் இல்லாமையால் திருமணம் செய்து கொள்ளாது முதிர் கன்னிகளாகவும், தற்கொலை செய்து தனது உயிரை மாய்த்துக் கொள்பராகவும் காணப்படுகின்றனர். இது மட்டுமன்றி இளம் பெண்கள் தனக்கு தேவையான செல்வங்களைத் திரட்டுவதற்காகவும், வீடு கட்டுவதாகவும் வெளிநாடு செல்பவர்களாக காணப்படுகின்றனர்.

மேலும் பெற்றோர்களானவர்கள் தனது பெண் பிள்ளை பிறந்தவுடனேயே அவர்களுக்காக பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து செல்வத்தை திரட்ட ஆரம்பித்து விடுகின்றனர். வசதியில்லாத குடும்பத்தினர் பெண் குழந்தைகளை கருவிலேயே அழிக்க முயலுகின்றனர். இத்தகைய செயற்பாடுகள் இடம்பெற இச் சீதன முறைமையே பிரதான காரணங்களுள் ஒன்றாகும்.

இவ்வாறு சீதனம் வாங்கி, கொடுத்து திருமணம் செய்யும் முறையானது வரவேற்கத் தக்கதல்ல. இதனால் சம்மாந்துறை முஸ்லிம் சமூகத்தினரிடத்தில் ஏன் இத்தகு நிலை காணப்படுகிறது?, முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் சவால்கள், இப் பிரச்சினைக்கான பரிந்துரைகள் முதலானவற்றை முன்வைப்பதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது.

## ஆய்வுப் பிரச்சினை

சமூகத்தில் சீதனம் எனும் கலாசாரம் பின்பற்றப்படுவதனால் பெண்கள் சமூகமும், பெண்வீட்டாரும் அதிகமான அசௌகரிகங்களை எதிர்கொள்கின்றனர். இந்நிலை சமூக அரங்கில் ஓர் எதிர்மறை அசைவினை ஏற்படுத்தி மக்களை இன்னலுக்குள்ளாக்குகின்றது. இதுவே ஆய்வுப் பிரச்சினையாகும்.

## ஆய்வு நோக்கம்

சீதனத்தினால் பெண்களும், பெண் வீட்டாரும் எதிர்கொள்ளும் சவால்களை கண்டறிவதே ஆய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு முறையியல்

முதலாம் நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக கட்டமைக்கப்படாத நேர்காணல் 50 நபர்களிடமும், 2 இலக்குக் குழுக் கலந்துரையால்கள், ஊர்த்தலைவர்கள், சமூக நலன் விரும்பிகள், கிராம உத்தியோகத்தர்கள், சீதனத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள், தொழில் வாண்மையாளர்கள் போன்றோரிடமும் கலந்துரையாடப்பட்டது, நேரடி அவதானிப்பும் இடம்பெற்றன. இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளக் கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டன.

## ஆய்வுப் பிரதேசம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற ஒரு பெரும் பிரதேசமே சம்மாந்துறை ஆகும். இலங்கையில் காணப்படும் 25 மாவட்டங்களுள் மூன்றாவது பெரிய மாவட்டமாக அம்பாறை மாவட்டம் காணப்படுகிறது. இம் மாவட்டமானது வடக்கே மட்டக்களப்பையும் கிழக்கே வங்கக் கடலையும் தெற்கே அம்பாந்தோட்டையையும் மேற்கே மொன்ராகலையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலகப் பிரிவுகளில் சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவும் ஒன்றாகும். இப் பிரதேசமானது 123.02$km^2$ பரப்பையும், சுமார் 72217 சனத் தொகையையும் கொண்டுள்ளது. அதுமட்டுமன்றி இங்கு 19923 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டும் வருகின்றன. இங்கு முஸ்லிம்கள் மட்டுமல்லாது தமிழர்கள், சிங்களவர்கள் மற்றும் பறங்கியர்கள் முதலானோரும் ஒற்றுமையுடன் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனர். இப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தங்களது பிரதான ஜீவனோபாயமாக விவசாயத்தை கொண்டிருக்கின்றனர். எனினும் இங்கு இன்னும் சில மக்கள் தங்களது கல்வி வளத்திற்கமைய அரசாங்க தொழில்வாய்ப்புகளை பெற்று வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இப் பிரதேச மக்கள் தங்களுக்கு வருமானம் ஈட்டும் வகையிலாக வர்த்தகம், கைத்தொழில் முதலானவற்றிலும் ஈடுபாடு கொண்டவர்களாகவும் காணப்படுகினறனர்.

## ஆய்வில் முடிவுகளும் கலந்துரையாடல்களும்

பெறப்பட்ட தரவுகளின்படி சீதனம் தொடர்பாக பின்வரும் சவால்களை சம்மாந்துறை பிரதேச முஸ்லிம்கள் எத்ர்கொள்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இச் சவால்களை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

### 1. முதிர் கன்னிகளின் உருவாக்கம்.

“சீதனம் கொடுத்தால்தான் பெண்களுக்கு திருமணம் முடிக்கலாம்” எனும் சூழல் தற்போது உருவாகியுள்ளது. சீதனம் எனும் பெயரில் மாடமாளிகைகள், இலட்சக்கணக்கிலான பணம், கார், காணி, தங்களது சொந்த ஊரில் வீடு கொடுப்பது மட்டுமல்லாது கொழும்பு நகரில் வீடு, மணப் பெண்ணுக்கு நகைகள் என பல பொருட்களை சீதனமாக மணமகனுக்கு கொடுத்தால்தான் ஒரு பெண் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற நிலை காணப்படுகிறது.

இவ்வாறானதொரு நிலை வசதிபடைத்தவர்களுக்கு மாத்திரமன்றி வசதியற்றவர்களுக்கும் காணப்படுவதால், அவர்கள் திருமணம் முடிக்காமல் தன் வாழ்வைக் கடத்தும் நிர்ப்பந்த நிலைக்கு உள்ளாகின்றனர். இதனால் உரிய வயதில் திருமணம் முடித்து தனது இல்லற வாழ்க்கையை தொடங்க வேண்டிய பெண்கள் வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கும் பரிதாபநிலையும் காணப்படுகிறது. மேலும் சீதனம் கொடுப்பதற்கு பணம், பொருளை திரட்ட பல கஷ்டங்களையும் எதிர் கொள்கின்றனர். இவ்வாறான காரணங்களால் அவர்கள் வயது சென்ற பிறகே திருமணம் முடிக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இவ்வாறு வயது சென்று திருமணம் முடிக்கும் கன்னிகளே முதிர் கன்னிகள் என்று அழைக்கப்படுகினறனர். இவர்களின் உருவாக்கமானது சமூகத்தில் பெரும் சவாலாக உள்ளது.

### 2. பெண்கள் வெளிநாடு செல்லும் வீதம் அதிகரிப்பு

நாளாந்த வாழ்க்கையினை கொண்டு செல்லுவதற்கே கஷ்டப்படும் குடும்பத்தில் பிறந்த பெண்களும் கூட சீதனம் கொடுத்துதான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. ஆனால், அக்குடும்பத்தில் உள்ள தகப்பனோ வேலைக்கு செல்லாது, போதைப் பொருட்களைப் பாவித்துக் கொண்டு திரிபவராகவும், சகோதரர்கள் வயது குறைந்தவர்களாகவும், மூத்த பிள்ளையாக பெண் பின்ளைகள் காணப்படும் பல குடும்பங்களில் எவ்வாறு சீதனம் கொடுப்பது எனும் பிரச்சினை உண்டாகுகின்றது.

சீதனம் கொடுப்பதற்கு பணம் தேவைப்படுகிறது. அப்பணத்தை திரட்ட அப்பெண்தான் வேலைக்கு செல்ல வேண்டும் எனும் கட்டாய சூழ்நிலையும் உருவாகுகிறது. எமது நாட்டில் வேலை செய்து பணத்தை திரட்டுவது என்பது சாத்தியமற்றது என எண்ணிக்கொண்டு அப்பெண் வெளிநாட்டிற்கு வேலையை நாடிச் செல்கின்றாள். அங்கே பல கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து வேலை செய்து பணத்தை திரட்டுகின்றாள். அவ்வாறு வேலை செய்யும் இடங்களில் பல வன்முறைகளுக்கு உள்ளாக வேண்டிய சூழ்நிலைகளும் காணப்படுகின்றன. தன் வாழ்க்கையில் அல்லது தனது பிள்ளைகளின் வாழ்க்கையில் அல்லது தனது சகோதரிகளின் வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்ற சென்று தன்னுடைய வாழ்க்கையை இருளாக்கிக் கொண்ட எத்தனையோ பெண்களை பற்றி அறிந்திருக்கின்றோம். இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை நோக்கி பெண்கள் அதிகம் செல்வதற்கு மூல காரணமாக சீதனமே உள்ளது.

**3. கடன் சுமை அதிகரிப்பு**

தங்களது பிள்ளைகளுக்கு உரிய வயதில் திருமணம் முடித்து கொடுக்க வேண்டும் என நினைத்து பெற்றோர்கள் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர். திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டுமெனின் குறைந்தது வீடும், மணப்பெண்ணுக்கான ஆபரணங்களையும் வாங்கிக் கொடுத்தாக வேண்டும். இவ்வாறு கொடுப்பதற்கு அவர்களது நாளாந்த வருமானம் போதுமானதாக இல்லை. ஆனால், வீடு கட்டியே ஆக வேண்டும் எனும் நிர்ப்பந்த நிலை உள்ளது. இதனால் பெற்றோர்கள் பணம் வைத்திருக்கும் அயலவர்களிடம் பணத்தினை கடனாக அதாவது வட்டிக்கும் வாங்கி வீட்டினை கட்டுகின்றனர்.

வீடு கட்டி முடிந்தாலும் திருமணச் செலவுகளுக்காக மீண்டும் கடனையே வாங்குகின்றனர். ஒருவகையாக தனது பிள்ளைக்கு திருமணம் முடித்தும் விடுகின்றனர். எனினும் திருமணம் முடிந்த பிறகு தான் வாங்கிய கடனை எண்ணிப் பார்த்தால் அவர்கள் எடுக்கும் மொத்த வருமானத்தை கொடுத்தாலும் அதனை நிவர்த்தி செய்வது முடியாத காரியாகின்றது. இக் கடன் சுமையை நினைத்தும், கடன் கொடுத்தவர்கள் தன் வீட்டிற்கு முன் வந்து இகழ்ந்து பேசும் வார்த்தைகளை கேட்டும் மனமுடைந்து போகின்றனர். இதனால் சிலர் தவறான முடிவுகளை எடுப்பதற்கும் முற்படுகிறனர்.

**4. கர்ப்பம் தரிப்பதில் தாமதம்.**

சீதனம் கொடுத்தே திருமணம் செய்ய வேண்டிய சூழ்நிலை காணப்படுவதனால், பணம் சேர்த்து வீடு கட்டுவதற்கு தாமதம் ஏற்படுகின்றது. இதனால் அப்பெண்களும் உரிய வயதில் திருமணம் முடிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. பெண்களைப் பொறுத்தளவில் 40 வயது பூர்த்தியடைய முன்னமே அவர்களுக்கு கர்ப்பம் தரிப்பதற்கான சாதக நிலை அதிகம் காணப்படுகிறது. அதற்குப்பிறகு கர்ப்பம் தரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் அரிதாகவே காணப்படுகிறது. இதனை அடிப்படையாக வைத்து நோக்கும்போது வசதியற்றவர்கள் வீடு கட்டி திருமணம் முடிப்பதற்கு தாமதமாவதால் கர்ப்பம் தரிப்பதிலும் தாமதம் ஏற்படுகின்றது. இதனால் அப்பெண்கள் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்படும் சூழல் உருவாகிறது.

ஆனால், திருமணம் கேட்டு வரும் மணமகனோ இவை அனைத்தையும் பார்த்துவிட்டு "பிள்ளை கறுப்பாக உள்ளது. இருந்தாலும் 10இலட்சம் ரூபாய் பணம் திருமணச் செலவிற்காக தருவீர்களாயின் மணமுடிக்க சம்மதம்" எனக் கூறும் அவர்களது வார்த்தையை கேட்டு மணமகளின் பெற்றோர் மற்றும் மணமகள் இடிந்து, மனமுடைந்து போகின்றனர். எவ்வளவுதான் ஹறாம், ஹலால் பாராது சம்பாதித்தாலும், சம்பளத்துடன் சேர்த்து இலஞ்சம் வாங்கி வீடு கட்டியும் போதாது என்றால், இன்னும் பணத்திற்கு எங்கே செல்வது என நினைத்து மன உளைச்சலுக்கு பெற்றோர் உள்ளாகின்றனர். இந்த சீதனம் அவர்களை தவறான வழியில் பணத்தினை சேர்க்க தூண்டுகின்றது. இன்னும் அக் கன்னிப் பெண்கள் தங்களுக்கு திருமணம் ஆகவில்லை என எண்ணி உளநோய்க்கு உள்ளாகவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகிறது.

**5. ஆன்மீக வலுவூட்டி வளர்த்தும் பயன்தான் என்ன? என குமுறும் ஆன்மீகவாதிகளின் மன உளைச்சல்.**

இஸ்லாத்தினை அதிகமாக கடைப்பிடித்து வாழும் உலமாக்கள், ஆன்மீகவாதிகள் போன்றோர் தங்களது பிள்ளைகள் சரியான ஆன்மீக பாதையினை பின்பற்றி நடப்பவர்களாக வரவேண்டும் என்று ஆன்மீகத்தை வலுவூட்டி வளர்க்கின்றனர். இஸ்லாமிய முறைப்படி ஒரு பெண்ணானவள் ஈமான்தாரியாகவும், இஸ்லாமிய சட்டதிட்டங்களையும் அறிந்தவளாகவும் காணப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறு தன் பிள்ளைகளை வளர்த்தாலும் திருமணம் கேட்டு வருபவர்கள் பெண் மார்க்கப்பற்றுள்ளவளா? இல்லையா? என்று பார்ப்பதற்குப் பதிலாக எவ்வளவு சீதனம் தருவார்கள் என்ற எதிர்பார்க்கையுடனேயே அதிகம் காணப்படுகின்றனர். இதனால் ஆன்மீகவாதிகள் தங்களது பிள்ளைகளுக்கு எவ்வளவுதான் ஆன்மீகத்தை வலுவூட்டி வளர்த்தாலும் என்னதான் பயன் என எண்ணி உளக் குமுறல்களுக்கு ஆளாகுகின்றனர்.

**6. அதிகமான பெண் பிள்ளைகளுடன் பிறக்கும் ஆண்கள் திருமணம் செய்து கொள்வதில் காலதாமதம் ஏற்படல்**

சகோதரிகளுடன் பிறந்த ஒவ்வொரு ஆண்மகனுக்கும் தங்களது சகோதரிகளுக்கு சிறந்த முறையில் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் காணப்படுகிறது. இது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. இருப்பினும் திருமணம் முடிப்பதற்கு தனது சகோதரியை கேட்கும் மாப்பிள்ளைக்கு சீதனமாக வீடு, பணம், நகை, வாகனம் என அனைத்தையும் கொடுத்தாலேயன்றி திருமணம் செய்து வைக்க முடியாது என்ற நிலையும் காணப்படுகின்றது. இதற்கமைய தனது சகோதரிகளுக்கு திருமணம் முடிப்பதற்குரியவற்றை சேர்ப்பதற்காக அரும்பாடுபட்டு, தனது வயது செல்கின்றதை கூட கவனியாது உழைக்கின்றனர். இறுதியில் தனது அனைத்து சகோதரிகளுக்கும் உரிய சீதனங்களை வழங்கி திருமணம் செய்வித்து விட்டு தங்களது வாழ்க்கையை திரும்பி பார்த்தால் அவர்களுக்கு வயது 30 அல்லது 35 அடைந்துவிடுகிறது. பின்னர் தனது திருமண செலவுக்காக அவரது மணப்பெண் வீட்டாரிடம் சீதனம் வாங்கிக் கொண்டு திருமணம் செய்து கொள்கின்றனர். இவ்வாறு சீதனமானது கொடுக்கப்படுவதும் பின்னர் தனது திருமணத்திற்காக வாங்குவதுமாக ஓர் மீள் சுழற்சி செயன்முறை இடம்பெறுகிறது. எனவேதான் இச் சீதனம் பெண்களுக்கு மட்டும் சவால் அல்ல. ஆண்களுக்கும் சவாலாகவே காணப்படுகிறது.

**7. "சீதனம் பெறுவது ஓர் கௌரவம்" என்ற எண்ணம் சமூகத்தில் பரவலாக காணப்படுகின்றமை.**

திருமணமொன்றை மேற்கொள்ளும்போது சமூகத்திலுள்ள சிலர் "வீடு கூட இல்லாமலா திருமணம் செய்ய போகிறாய்?, மாப்பிள்ளை படித்தவராகையால் வாகனம் ஒன்றை பெண் வீட்டாரிடம் கேள்?" என்று எத்தனையோ கேள்விகளும் விமர்சனங்களும் எழுகின்றது. இதற்கு பயத்திலும் தாம் வீடு, வாகனம், நகை வாங்கினோம் என்று பெருமையாக பேசுமளவுக்கு சீதனம் தலைவிரித்து ஆடுகின்றது. சீதனத்தை வாங்கிவிட்டு " நாங்கள் எங்களுக்கு வாங்கவில்லை. உங்களது பெண் பிள்ளைக்குதானே வீடு கொடுக்கிறீர்கள், உங்களது பெண்ணை ஏற்றிச் செல்வதற்கு தான் வாகனம் கேட்டோம்" என ஆசை, ஆறுதல் வார்த்தைகளைப் பேசி தாம் வாங்கிய சீதனத்தை நியாயம் என வாதிடுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

8. **தொழில், கல்வி தகைமைகள் அதிகரிக்க அதிகரிக்க சீதனத்தின் தொகையும் அதிகரித்தல்**

ஒரு ஆண் கல்வியில் முன்னிலை வகித்து சிறந்த தொழிலினை உடையவராக இருந்தால் அவரது பெற்றோர் அல்லது சகோதரிகள் “ எங்களது பிள்ளை டொக்டர். அவருக்கு கார் ஒன்று தரலாமே.” என்று கேட்பதுடன் மாடி வீடு, காணி நிலம் முதலானவற்றையும் எதிர்பார்ப்போராக காணப்படுகின்றனர். மணமகனுக்கு கல்வித் தரம் உயர்ந்ததாக இருந்தால் பொருட்களின் விலை அதிகரிப்பது போல் சீதனத்தின் அளவும் அதிகரிக்கின்றது.

இவ்வாறாக, சீதனம் வாங்காமல், கொடுக்காமல் திருமணத்தினை செய்து கொள்வது வரவேற்கத்தக்கதாகும். இதன் மூலம் திருமண வாழ்வில் அபிவிருத்தி ஏற்படுகின்றது. அது மாத்திரமன்றி முதிர் கன்னி உருவாக்கம், பெண்கள் வெளிநாடு செல்லுதல், கடன் சுமை, உளவியல் ரீதியான பிரச்சினைகள் முதலானவற்றில் இருந்து தவிர்ந்து கொள்ளவும் வழிகோலுகின்றது. மேலும், இத்தகைய திருமண முறையானது சமூகத்தில் ஏற்பட்டு வருகின்ற வெறுக்கத்தக்க செயல்களையும் தடுப்பதாய் அமைகின்றது.

## பரிந்துரைகள்

1. இஸ்லாம் திருமணம் தொடர்பாக வழிகாட்டியுள்ள வழிகாட்டுதல்களை அதன் தூய வடிவில் கற்றல்.
2. இவ்வாறு பெறப்பட்ட அறிவினை ஒவ்வொரு முஸ்லிம்களும் தனது சொந்த வாழ்வில் கடைப்பிடித்தல்.
3. இவ்வாறு கடைப்பிடிக்கும் தூய விடயங்களை அதே தூய வடிவில் பிற மக்களுக்கு ஒப்புவித்தல்.
4. சீதனம் தொடர்பான எதிர்ப்பு கட்டுரை, ஆய்வு, புத்தகம், விவாதம் என்பவற்றை இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தல்.
5. சீதனத்தினால் சீரழியும் சமூகத்தின் நிலையினை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதுடன், விழிப்புணர்வூட்டும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் என பரிந்துரை செய்யலாம்.

## உசாத்துணைகள்


1. அல்குர்ஆன்
2. ஹதீஸ்
3. (2013), “சீதனம் ஏற்படுத்தும் சீரழிவுகள் பல” Retrieved from: http://sindhanaiforum.blogspot.com/2013/11/blog-podt_289.html?=1
4. காலித் இப்னு வலீத் (2013), “சீதனம் பற்றி இஸ்லாம்” Retrieved from: http://m.facebook.com/226830314142181/photos/a.22684364141176/227657034059509/?type=3
5. (2017),“மஹர்(மணக்கொடை)”Retrievedfrom:http://www.google.com/amp/s/onlinetntj.com/108-
6. “வரதட்சனை ஓர் பாவச் செயல்” Retrieved from: http://rifacouple.weebly.com/hellip.html